JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

| | | | |
|---|---|---|---|
| Calendar | | C.C.No. | **2/2010** |
| Miscellaneous | | C.M.P.No | |
| Sessions | | S T C No. | |
| Deposition of witness for | **P.W. 4** | Prosecution /Defence / Court | |
| Name | **Banumathi** | Caste | |
| Husband's Name | **Rangasamy** | Calling | |
| Village | **Sakthi nagar, Vijayamangalam** | Religion | |
| Taluk | **Perundurai** | Age | |

**Accused absent**. **Petition U/s**.317 **Cr**.**P**.**C**., **filed and allowed**.

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act 1969( Central Act 44 of 1969 ) of the day of **Date 16.07.2025.**

**முதல் விசாரணை**

**1)** நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து கொண்டு இல்லத்தரசியாக உள்ளேன். அ.சா.1 என் மருமகன். அ.சா.2 என் மகள். இருவருமே அரசுப்பள்ளியில் வேலை பார்க்கும் ஆசிரியர்கள் ஆவார்கள். அவர்கள் வேலைக்குச் செல்லும் போது அவர்கள் குழந்தைகளை என்னிடம் விட்டுச் செல்வார்கள். சம்பவம் நடந்த தேதி எனக்க நினைவில் இல்லை. சம்பவ நடந்து நீண்ட வருடங்கள் ஆகிவிட்டதால் எனக்கு தற்போது நினைவில் இல்லை. சம்பவத்தன்று என் மகள் குடியிருக்கும் வீடு உடைக்கப்பட்டிருப்பதாக அ.சா. 3 புவனேஸ்வரி மூலம் கேள்விபட்டு நான் என் கணவருக்கு தகவல் சொல்லி அதன் பின்னர் சம்பவத்தை பற்றி மகளுக்கும், என் மருமகனுக்கும் தகவலை என் கணவர் சொல்ல அவர்கள் வீட்டுக்கு வந்து பார்த்த போது அவர்களது பீரோவில் இருந்த நகைகள் மற்றும் பணம் யாரொ திருடி சென்று இருப்பது பற்றி பெருந்துறை காவல் நிலையத்தில் புகார் அளித்ததின் பேரில் பெருந்துறை காவல் ஆய்வாயர் அவர்கள் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**1)** அ.சா.2 என் மகள் என் வீட்டிலிருந்து எவ்வளவு தொலைவில் குடியிருக்கிறார் என்றால் பக்கத்து வீதியில் குடியிருந்து வருகிறார். அ.சா.3 போனில் சொன்னாரா என்றால் இல்லை. நேரில் சொன்னார். என் மகளுக்கு தகவல் சொல்வதற்கு முன்பாக வீட்டுக்கு சென்று பார்த்தேன் என்றால் இல்லை. அ.சா.3 எத்தனை மணிக்கு தகவல் சொன்னார் என்றால் மதியம் சுமார் 12.30 – 1.00 மணி இருக்கும். போலீசாருக்கு தகவல் சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.1 மற்றும் அ.சா.2 தகவல் தெரிவித்தார்கள். அன்றைய தினம் என்னை போலீஸார் விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். அ.சா 2 என் மகள் என்பதால் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை